


dinakani2023@gmail.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI www.dhinakani.com காலை நாளிதழ்




| Vol: 02 | Issue: 282 | 4 Pages | 9.5.2025 | Friday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 282 | 4 பக்கங்கள் | 9.5.2025 | வெள்ளிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**களவென்னுங் காரறி வாண்மை அளவென்னும்**
**ஆற்றல் புரிந்தார்க ணில்**

**விளக்கம்: களவு என்பதற்கு காரணமான மயங்கிய அறிவு உடையவராயிருத்தல், அளவு அறிந்து வாழ்தலாகிய ஆற்றலை விரும்பினவரிடத்தில் இல்லை.**

## இந்தியாபாகிஸ்தான் போர் பதற்றம்: யாருக்கு ஆதரவு? இலங்கை பதில்



கொழும்பு, மே.9

பஹல்காம் தாக்குதலுக்கு பழிதீர்க்கும் நடவடிக்கையாக பாகிஸ்தான் மீது இந்தியா சரமாரியாக ஏவுகணை தாக்குதல் நடத்தியது. 'ஆபரேஷன் சிந்தூர்' என்ற இந்த அதிரடி வேட்டையில் ஈடுபட்டது. இதில் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் 9 இடங்களில் உள்ள பயங்கரவாத முகாம்கள் அழிக்கப்பட்டன. அதோடு, 70 பேர் கொல்லப்பட்டனர்.

இந்தியாவின் தாக்குதல் நடவடிக்கைக்கு பதிலடி கொடுப்போம் என்று பாகிஸ்தான் கூறியுள்ளது. இதனால், இந்தியா பாகிஸ்தான் இடையே போர் பதற்றம் அதிகரித்துள்ளது. இந்த நிலையில், இந்தியா, பாகிஸ்தான் இடையே போர் பதற்றம் நீடிக்கும் நிலையில், அணிசேரா கொள்கையை கடைபிடிப்பதாக இலங்கை அறிவித்துள்ளது.

இது தொடர்பாக இலங்கை அமைச்சரவை செய்தி தொடர்பாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ கூறுகையில்,

இந்தியப் பெருங்கடல் பகுதியில் நடைபெறும் இந்த சண்டைகளில் நாங்கள் ஈடுபட மாட்டோம் என்பது எங்கள் நிலைப்பாடு. எங்களின் வான்வெளி மற்றும் எங்கள் பிரதேசத்தை பயன்படுத்தி, மற்றொரு நாட்டை தாக்குவதை அனுமதிக்க மாட்டோம். எந்த வகையான பயங்கரவாதத்தையும் நாங்கள் அங்கீகரிக்கவும் மாட்டோம், ஆதரிக்கவும் மாட்டோம், பயங்கரவாதத்தை தடுப்பதற்கு ஆதரவளிக்க நாங்கள் தயாராக இருக்கிறோம்.

இந்தியாவும்பாகிஸ்தானும்அவ்வப்போதுஎங்களுக்குஉதவுகின்றன; எதிர்காலத்திலும் எங்களுக்கு உதவ உள்ளன. எனவே நாங்கள் இருவருடனும் நல்ல இராஜதந்திர உறவுகளைப் பேணுகிறோம். நாங்கள் எங்கள் இறையாண்மையைப் பாதுகாப்போம், அணிசேரா அணுகுமுறையைப் பின்பற்றுவோம்; யாருக்கும் ஆதரவில்லை.

பிராந்திய பாதுகாப்பு, பொதுமக்களின் பாதுகாப்பு மற்றும் பிராந்தியத்தின் அமைதியே இலங்கை அரசின் விருப்பம். போர் பதற்றத்தைத் தணிக்க இலங்கை எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை. பிரச்சினைகளை அவர்களே பேசி தீர்க்க வேண்டும். நிலைமையை வெளியுறவு அமைச்சகம் உன்னிப்பாகக் கண்காணித்து வருகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

## போர் பதற்றம்: லாகூரில் இருந்து அமெரிக்கர்கள் வெளியேற உத்தரவு



இஸ்லாமாபாத், மே.9

காஷ்மீரின் அனந்த்நாக் மாவட்டம் பஹல்காம் பகுதியில் கடந்த ஏப்ரல் 22ந்தேதி பயங்கரவாதிகள் நடத்திய கொடூர தாக்குதலில் 26 பேர் கொல்லப்பட்டனர். இந்த தாக்குதலுக்கு பதிலடியாக பாகிஸ்தானில் உள்ள பயங்கரவாத முகாம்கள் மீது இந்தியா மே 7ந்தேதி(நேற்று)அதிரடிதாக்குதல்நடத்தியது.பாகிஸ்தான்ஆக்கிரமிப்பு காஷ்மீரில் உள்ள பயங்கரவாத முகாம்கள் மீது இந்த தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்த தாக்குதலுக்கு 'ஆபரேஷன் சிந்தூர்' என பெயரிடப்பட்டுள்ளது. இந்த தாக்குதலில் பாகிஸ்தானில் 4 இடங்கள் மற்றும் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் 5 இடங்கள் என மொத்தம் 9 இடங்களில் பயங்கரவாதிகள் உள்ள அலுவலகங்கள், பயிற்சி முகாம்கள், அவர்களது வசிப்பிடங்கள் என 21 பயங்கரவாத நிலைகளை தரைமட்டமாக்கின.

இந்தியாவின் தாக்குதல் நடவடிக்கைக்கு பதிலடி கொடுப்போம் என்று பாகிஸ்தான் கூறியுள்ளது. இதனால், இந்தியா பாகிஸ்தான் இடையே போர் பதற்றம் அதிகரித்துள்ளது. இருநாடுகளும் மோதலை அதிகரிக்க கூடாது எனவும், இந்த விவகாரத்தில் மத்தியஸ்தம் செய்ய தயாராக உள்ளதாகவும் அமெரிக்க அதிபர் டிரம்ப் கூறியுள்ளார்.

இதற்கிடையில் இந்தியாவில் உள்ள 15 நகரங்கள் மீது தாக்குதல் நடத்த பாகிஸ்தான் திட்டமிட்டதாகவும், பாகிஸ்தானின் தாக்குதல் முயற்சி முறியடிக்கப்பட்டதாகவும் இந்திய பாதுகாப்புத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. மேலும் பாகிஸ்தானின் லாகூரில் உள்ள வான் பாதுகாப்பு அமைப்பு அழிக்கப்பட்டதாகவும் இந்தியா தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், லாகூரில் இருந்து அமெரிக்கர்கள் வெளியேற அந்நாட்டு அரசு உத்தரவிட்டுள்ளது. இது தொடர்பாக பாகிஸ்தானில் உள்ள அமெரிக்க தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது;

"லாகூரில் உள்ள ஆளில்லா விமானங்கள் வெடித்ததாக வந்த செய்திகள், சுட்டு வீழ்த்தப்பட்ட ஆளில்லா விமானங்கள் மற்றும் வான்வெளியில் ஊடுருவக்கூடிய சாத்தியக்கூறுகள் பற்றிய தகவல்கள் காரணமாக, லாகூரில் உள்ள அமெரிக்க துணைத் தூதரகம் அனைத்து துணைத் தூதரக ஊழியர்களையும் பாதுகாப்பான இடங்களில் தங்கியிருக்க உத்தரவிட்டுள்ளது.

மோதல்கள் நிறைந்த பகுதியில் இருக்கும் அமெரிக்க குடிமக்கள் பாதுகாப்பாக வெளியேற முடிந்தால் வெளியேற வேண்டும். வெளியேறுவது பாதுகாப்பானதாக இல்லாவிட்டால், அவர்கள் பாதுகாப்பான இடங்களில் தங்கியிருக்க வேண்டும்.

பாகிஸ்தானில் உள்ள அமெரிக்க தூதரகம் மற்றும் துணைத் தூதரகங்கள்எங்கள்செய்திஅமைப்புமூலம்தகவல்கள்அனுப்பப்படும். ஸ்மார்ட் டிராவலர் சேர்க்கை திட்டத்தில் (STEP) நீங்கள் சேர்ந்துள்ளீர்கள் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

அமெரிக்க குடிமக்கள் பாதுகாப்பான தங்குமிடம் தேடிக்கொள்ள வேண்டும். அமெரிக்க அரசாங்க உதவியை நாடாத பிற வெளியேற்றத் திட்டங்களை கொண்டிருக்க வேண்டும்."

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கண்ணீர் வேண்டாம் தம்பி... மருத்துவ உதவி கோரிய மாற்றுத்திறனாளி மாணவனுக்கு முதல்அமைச்சர் பதில்

சென்னை மே.9

கிருஷ்ணகிரி மாவட்டத்தைச் சேர்ந்த 12ம் வகுப்பு மாணவன் கீர்த்திவர்மா. இவர் இன்று வெளியான 12ம் பொதுத்தேர்வு முடிவில் 600க்கு 471 மதிப்பெண்கள் எடுத்துள்ளார். இரண்டு கைகளும் இல்லாத மாற்றுத்திறனாளி மாணவனான கீர்த்திவர்மாஉறுப்புமாற்றுஅறுவை சிகிச்சை செய்ய உதவ வேண்டும் என்று முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு கண்ணீர் மல்க கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்த நிலையில் கண்ணீர் வேண்டாம் தம்பி என்று மாணவனுக்கு முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் பதில் அளித்துள்ளார். இது தொடர்பாக எக்ஸ் தளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது:



கண்ணீர் வேண்டாம் தம்பி! மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியனிடம் உங்களுக்கான மருத்துவச் சிகிச்சைகளுக்கான ஏற்பாடுகளைக் கவனிக்கச் சொல்லியிருக்கிறேன். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

## தாராபுரம், விவேகம் பள்ளியில் 2024 - 2025 ஆம் கல்வியாண்டில் பன்னிரண்டாம் வகுப்பு பொதுத்தேர்வில் மாநில அளவில் மாபெரும் சாதனைப் பெற்றவர்கள் விவரம்

தாராபுரம், மே 09

திருப்பூர் மாவட்டம் தாராபுரம் உடுமலை சாலையில் உள்ள திருமலை பாளையத்தில் மிகவும் பிரபலமான தாராபுரம்விவேகம் பள்ளியில் 2024 2025 ஆம் கல்வியாண்டில் பன்னிரண்டாம் வகுப்பு பொதுத்தேர்வில் மாநில அளவில் மாபெரும் சாதனைப் பெற்றுள்ளார்கள்.இந்த சாதனைகளில் மேலும் ஒரு மைல் கல்லாக பள்ளி அளவில் 598 /600 மதிப்பெண்கள் பெற்று கே. கிருஷ்ணபிரியன் நான்கு பாடங்களிலும் 100/100 மதிப்பெண்கள் பெற்றுப்



பொறியியல் கட்ஆப் 200 / 200க்கு எடுத்து முதலிடமும் 597/ 600 மதிப்பெண்கள் பெற்று ஆர். ரஞ்சித் இரண்டாமிடமும் 592/ 600 மதிப்பெண்கள் பெற்று கே. தான்யஸ்ரீ மூன்றாமிடமும் பள்ளியில் 72 சதங்கள் எடுத்தும் மாணவர்கள் பள்ளிக்குப் பெருமை சேர்த்துள்ளனர். விவேகம் பள்ளியில் இக்கல்வியாண்டிலும் மாணவர்கள் 100% தேர்ச்சிப் பெற்றுச் சாதனைப் புரிந்துள்ளனர். இவ்வெற்றிக்கு உறுதுணையாக இருந்த விவேகம் பள்ளியின் தாளாளர் முனைவர் ஆர். சுப்பிரமணியன் செயலாளர் முனைவர்கே.பூபதி, பள்ளியின்நிர்வாகிகள் மற்றும் பெற்றோர்கள் வெற்றி பெற்ற மாணவர்களைப் பாராட்டி பரிசு வழங்கிச் சிறப்பித்தனர்..

## விடுதலைப் போராட்ட வீரர் வீரபாண்டிய கட்டபொம்மன் திருவுருவச் சிலைக்கு அமைச்சர் பெருமக்கள் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை

விடுதலைப் போராட்ட வீரர் வீரபாண்டிய கட்டபொம்மன் திருவுருவச் சிலைக்கு 9.5.2025 அன்று மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்துகிறார்கள்

தமிழ்நாடு அரசின் சார்பில், சென்னை, கிண்டி காந்தி மண்டப வளாகத்தில் அமைந்துள்ள விடுதலைப் போராட்ட வீரர் வீரபாண்டிய கட்டபொம்மன் சிலைக்கு, அவரது பெருமைகளைப் போற்றி மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் 9.5.2025 அன்று காலை 9.30 மணியளவில், அன்னாரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்துகிறார்கள்.

வீரபாண்டிய கட்டபொம்மன், ஜெகவீர கட்டபொம்மு மற்றும் ஆறுமுகத்தம்மாள் தம்பதியரின் மகனாகப் பிறந்தவர். இவர் முப்பது வயது வரை தந்தை ஜெகவீர கட்டபொம்மு பாளையக்காரராக இருந்து வந்ததால் தந்தைக்கு உதவியாக இருந்தார். அவருக்குப்பின் கட்டபொம்மன் 1790ஆம் ஆண்டு பிப்ரவரி 2ஆம் தேதி, 47வது பாளையக் காரராகப் பொறுப்பேற்றார்.

வீரபாண்டிய கட்டபொம்மனிடம் வரி கேட்டு வந்த வெள்ளையர்களை எதிர்த்து வரி கொடுக்க மறுத்தார். அதனால் ஏற்பட்ட பகைக்காரணமாக வெள்ளையருடன் போரிட்டு இறுதியில் ஆங்கிலேயத் தளபதி பானர்மென் உத்தரவின்படி, அக்டோபர் 16ஆம் தேதி, 1799 ஆம் ஆண்டில் கயத்தாறில் தூக்கிலிடப்பட்டார். முத்தமிழறிஞர் கலைஞர் வீரபாண்டிய கட்டபொம்மனின் தியாகத்தைப் போற்றி, அழிக்கப்பட்ட வீரபாண்டிய கட்டபொம்மனின் கோட்டையை பாஞ்சாலங்குறிச்சியில் மீண்டும் கட்டி எழுப்பி 18.8.1974 அன்று திறந்துவைத்தார். கட்டபொம்மனின் அத்துடன் 204 வழித்தோன்றல்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுத்து நிலப்பட்டா, மனைப் பட்டாக்களையும் வழங்கினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், கிண்டி காந்தி மண்டப வளாகத்தில் 14.4.2023 அன்று கட்டபொம்மன் திருவுருவச் சிலையை அமைத்து. "வெள்ளை ஏகாதிபத்தியத்திற்கு எதிராக உரத்த குரல் எழுப்பிய போர் மறவன் வீரபாண்டிய கட்டபொம்மன்" எனக் கல்வெட்டில் பொறித்துப் பாராட்டியுள்ளார்.

தமிழ்நாடு அரசின் சார்பில் தூத்துக்குடி மாவட்டம். பாஞ்சாலங்குறிச்சியிலும், சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்திலும் அமைக்கப்பட்டுள்ள வீரபாண்டிய கட்டபொம்மன் சிலைகளுக்கு, அவரது வீர உணர்வுகளைப் போற்றி ஆண்டுதோறும் சிறப்புகள் செய்யப்படுகின்றன.

அதன்படி, இந்த ஆண்டின் சித்திரைத் திங்கள் கடைசி வெள்ளிக்கிழமையான 9.5.2025 அன்று காலை வீரபாண்டிய கட்டபொம்மன் திருவுருவச் சிலைகளுக்கு மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர். உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டு மாலை அணிவித்து மலர்கள் தூவி மரியாதை செலுத்திச் சிறப்பிக்கிறார்கள்.

## கிருஷ்ணா தண்ணீர் இன்று தமிழக எல்லை வருகிறது

சென்னை,மே.9

சென்னை நகர மக்களின் முக்கிய குடிநீர் ஆதாரமாக பூண்டி ஏரி உள்ளது. இந்த ஏரியில் மழைநீர் மற்றும் கிருஷ்ணா நதி நீர் பங்கீடு திட்டத்தின்படி ஆந்திர மாநிலம் கண்டலேறு அணையில் இருந்து பெறப்படும் தண்ணீரை சேமித்து வைத்து தேவைப்படும்போது புழல் மற்றும் செம்பரம்பாக்கம் ஏரிகளுக்கு திறந்து விடப்படுவது வழக்கம். கிருஷ்ணா நதிநீர் பங்கீடு திட்டத்தின்படி கடந்த மார்ச் 24ம் தேதி பூண்டி ஏரிக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டது. இதனிடையே ஸ்ரீகாளஹஸ்தி அருகே அஞ்சூர் என்ற பகுதியில் கிருஷ்ணா கால்வாயில் அமைக்கப்பட்டிருந்த மதகு பழுதடைந்தது. இதனை சரி செய்யும் பணிகள் தொடங்கப்பட்டதால் கடந்த மாதம் 24ம் தேதி பூண்டி ஏரிக்கு தண்ணீர் திறப்பு நிறுத்தப்பட்டது.

பின்னர் மதகு சீரமைப்பு பணிகள் நிறைவடைந்ததால் கடந்த 5ம் தேதி கண்டலேறு அணையில் இருந்து பூண்டி ஏரிக்கு மீண்டும் கிருஷ்ணா தண்ணீர் திறந்துவிடப்பட்டது.



காலை நிலவரப்படி கிருஷ்ணா தண்ணீர் ஸ்ரீகாளஹஸ்தி தாண்டி பாய்ந்து வந்துகொண்டிருக்கிறது. நாளை தமிழக எல்லையான ஊத்துக்கோட்டை அருகே உள்ள தாமரை குப்பம் ஜீரோ பாயிண்ட் பகுதிக்கு கிருஷ்ணா தண்ணீர் வந்து சேரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தநிலையில் கண்டலேறுஅணையில்இருந்து பூண்டி ஏரிக்கு தண்ணீர் திறப்புகாலைவினாடிக்கு 1,170 கன அடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. வரும் நாட்களில் தண்ணீர் திறப்பு மேலும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## கேளிக்கை வரி மசோதாவுக்கு கவர்னர் ஒப்புதல்

சென்னை, மே.9

கல்வி நிறுவனங்களில் நடைபெறும் நிகழ்ச்சிகளுக்கு 10 சதவீதம் கேளிக்கை வரி விதிக்கும் தமிழ்நாடு அரசின் சட்ட மசோதாவுக்கு கவர்னர் ஆர்.என்.ரவி ஒப்புதல் அளித்துள்ளார். கடந்த ஆண்டு டிசம்பரில் நடைபெற்ற சட்டசபை கூட்டத்தொடரில் இந்த மசோதா நிறைவேற்றப்பட்டது. தமிழக அரசு நிறைவேற்றிய மசோதாவுக்கு கவர்னர் ஒப்புதல் அளித்த நிலையில் அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



கேளிக்கை வரி மசோதா:

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் கேளிக்கை வரிச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கேளிக்கைகள் மற்றும் பொழுதுபோக்குகள் மீது வரி விதிக்கவும், வசூலிக்கவும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது. கல்வி நிறுவனம் உள்ளிட்ட எந்தவொரு நிறுவனத்தால் அனுமதி கட்டணம் வசூலித்து நடத்தப்படும் இசை நிகழ்ச்சி, நாடகம், காட்சி அல்லது பிற நிகழ்ச்சி எதற்கும் கேளிக்கை வரி விதிப்பதற்கும் வசூலிப்பதற்கும் அதிகாரம் அளிக்க சட்டங்கள் எதுவும் தற்போது இல்லை.

எனவே அதுபோன்ற நிகழ்ச்சிகளுக்கான அனுமதிக் கட்டணத்தின் மீது 10 சதவீதம் கேளிக்கைகள் வரி விதிக்கவும், வசூலிக்கவும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழிவகை செய்ய அரசு முடிவெடுத்துள்ளது. இதற்காக தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் கேளிக்கை வரிச்சட்டத்தில் திருத்தம் செய்து, புதிய பிரிவு சேர்க்கப்படுகிறது.

கல்விநிறுவனம்,சங்கம்,குழுமம்,யாருடையபெயரிலாவது அமைக்கப்பட்டுள்ள கழகம் போன்ற நிறுவனங்களின் வளாகங்கள் மற்றும் நுழைவுச்சீட்டு அல்லது பங்களிப்பு அல்லது சந்தா போன்ற கட்டணங்கள் செலுத்த வேண்டிய இடங்கள் ஆகியவற்றில் நடத்தப்படும் இசை நிகழ்ச்சி, நாடகம், காட்சி அல்லது பிற நிகழ்ச்சியின் அனுமதிக் கட்டணத்தில்மாநகராட்சிஉள்ளிட்டஉள்ளாட்சிஅமைப்புகள் 10 சதவீதம் கேளிக்கை வரி வசூலிக்கும் வகையில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.



# சென்னையில் 2வது நாளாக தொடர்ந்த போர்க்கால பாதுகாப்பு ஒத்திகை



சென்னை, மே.9

ஜம்மு மற்றும் காஷ்மீரில் முக்கிய சுற்றுலா பகுதியான பஹல்காம் பகுதியில் கடந்த 22ந்தேதி பயங்கரவாதிகள் கொடூர தாக்குதல் நடத்தியதில் 26 பேர்பலியானார்கள். இந்த தாக்குதலுக்கு பாகிஸ்தானில் இருந்து செயல்பட்டு வரும் லஷ்கர்இதொய்பா பயங்கரவாத அமைப்பின் கிளை அமைப்பான 'தி ரெசிஸ்டண்ட் பிரண்ட்' பயங்கரவாத அமைப்பு பொறுப்பேற்றது.

இந்நிலையில், பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் உள்ளபயங்கரவாதமுகாம்கள் மீது ஆபரேஷன் சிந்தூர் என்ற பெயரில் கடந்த 6ந்தேதி நள்ளிரவில் இந்திய ராணுவம் தரப்பில் தாக்குதல் நடத்தப்பட்டது. இந்த துல்லிய தாக்குதலில், 9 பயங்கரவாத உட்கட்டமைப்புகள் இலக்காக கொள்ளப்பட்டன. இதில், பயங்கரவாதிகள் பலர் கொல்லப்பட்டனர்.

இந்நிலையில், பாகிஸ்தான் தரப்பில் இருந்து இந்தியாவின் முக்கிய பகுதிகள் மீது தாக்குதல் நடத்தப்படலாம் என உளவு தகவல் கிடைத்தது. இதனை தொடர்ந்து, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நாடு முழுவதும் உள்துறை அமைச்சகம் சார்பில் 244 இடங்களில் போர்க்கால பாதுகாப்புஒத்திகை நடத்த முடிவானது.

இவற்றில் சென்னையில் உள்ள கல்பாக்கம், துறைமுகம் ஆகிய 2 இடங்கள் தேர்வு செய்யப்பட்டு இருந்தன. அந்த பகுதிகளில் நேற்று போர்க்கால பாதுகாப்பு ஒத்திகை நடைபெற்றது.

இந்தியாவில் கடைசியாககடந்த 1971ம் ஆண்டு போர்க்கால ஒத்திகை மேற்கொள்ளப்பட்டது. அதன்பிறகு 54 ஆண்டுகள் கழித்து மீண்டும் நேற்று போர்க்கால பாதுகாப்பு ஒத்திகை நடைபெற்றது. நேற்று மாலை 4 மணி முதல் இரவு 9 மணி வரை நடந்த இந்த போர்க்கால பாதுகாப்பு ஒத்திகையின் போது மின்சாரம் துண்டிப்பு, இணைய சேவை துண்டிப்பு, போக்குவரத்து மாற்றம் உள்ளிட்டவை நடத்தப்பட்டன.

குறிப்பாக வான்வழி தாக்குதலின்போது ஒலிக்கப்படும் சைரன் ஒலியை எழுப்பியும் போர் ஒத்திகை நடைபெற்றது. மேலும், சில பொது இடங்களுக்கான அனுமதி தடை செய்யப்பட்டும் ஒத்திகை நடைபெற்றது.

போர்க்கால பாதுகாப்பு ஒத்திகை குறித்து மக்கள் அச்சப்படதேவையில்லை எனபேரிடர்மேலாண்மை ஆணையம் தெரிவித்து இருந்தது. இதன்படி, சென்னையில் 2 இடங்களில் பாதுகாப்பு ஒத்திகை நடந்தது. சென்னையில் அணுமின் நிலையம் தாக்கப்பட்டால் அவற்றை எதிர்கொள்வது எப்படி? என்பது பற்றி ஒத்திகை நடந்தது. மாவட்ட கலெக்டர், பேரிடர்மேலாண்மை ஆணையத்தின் அதிகாரிகள், வீரர்கள் மற்றும் பிற துறைகளை சேர்ந்த அதிகாரிகள் இதில் பங்கேற்றனர்.

இதன்படி மின் விளக்குகளை அணைத்தும், மக்களைபாதுகாப்பாக வெளியேற்றியும் ஒத்திகை பார்க்கப்பட்டது. இதில், பல்வேறு துறைகளை சேர்ந்த வீரர்கள், மாநில பேரிடர் மேலாண்மை குழுவினர் ஈடுபடுத்தப்பட்டனர். போர்ச்சூழலின் போது, எப்படி செயல்பட வேண்டும் என்பது பற்றி மக்களுக்கு செயல் விளக்கம் தரப்பட்டது.

இந்நிலையில், சென்னையில் இன்று 2வது நாளாக போர்க்கால பாதுகாப்பு ஒத்திகை தொடர்ந்தது. இதன்படி, 3 இடங்களில் போர்க்கால பாதுகாப்பு ஒத்திகை இன்று நடந்து வருகிறது. சென்னை விமான நிலையம், மணலி சிபிசிஎல், எண்ணூர் துறைமுகத்தில் ஒத்திகை நடைபெற்று வருகிறது.

மத்திய உள்துறை அமைச்சக அறிவுறுத்தலின்படி, நடந்து வரும் இந்த ஒத்திகையில், ஆபத்து காலத்தில் எப்படி செயல்பட வேண்டுமென விளக்கம் தரப்படுகிறது. சைரன் ஒலியை எழுப்பியும் ஒத்திகை மேற்கொள்ளப்பட்டது. பாதுகாப்பு படையினர், தீயணைப்பு வீரர்கள் இணைந்து ஒத்திகையில் ஈடுபட்டனர்.

# நெல்லையில் 5 கிலோ 625 கிராம் புகையிலை பொருட்கள் பறிமுதல்: முதியவர் கைது




திருநெல்வேலி மே.9

திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி காவல் நிலைய சரகத்திற்கு உட்பட்ட பகுதியில் சப்இன்ஸ்பெக்டர் ஆபிரகாம் தலைமையிலான காவல் துறையினர் நேற்று (7.5.2026) வாகனத்தணிக்கையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது ஏமன் புதுகுளத்தைச் சேர்ந்த சிங்கக்குட்டி (வயது 70) என்பவரை சந்தேகத்தின் பேரில் சோதனை செய்து பார்த்தனர். அப்போது அவர் அரசால் தடை செய்யப்பட்ட மனித உயிருக்கு தீங்கு விளைவிக்க கூடிய 5 கிலோ 625 கிராம் புகையிலை பொருட்களை விற்பனை செய்வதற்காக வைத்திருந்தது தெரியவந்தது. இதனையடுத்து மேற்சொன்ன சப்இன்ஸ்பெக்டர் சிங்ககுட்டியை நாங்குநேரி காவல் நிலையம் அழைத்துச் சென்று வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு அவரை நேற்று கைது செய்தார். மேலும் அவரிடம் இருந்து 5 கிலோ 625 கிராம் புகையிலை பொருட்களை பறிமுதல் செய்து நடவடிக்கை எடுத்தார்.

# மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டியதாக பொய் வழக்கு பதியப்பட்ட விவகாரம்: ரூ.1 லட்சம் இழப்பீடு வழங்க உத்தரவு




சென்னை மே.8

கடலூர் மாவட்டம் முதுநகர் காவல் நிலையத்தில் காவலராக பணியாற்றக்கூடிய சுதாகர் என்பவருக்கும், சண்முகம் என்பவருக்கும் இடையே பிரச்சனை இருந்துள்ளது. இதில் அன்னவல்லி பஞ்சாயத்து துணைத் தலைவர் வைத்தியலிங்கம் என்பவர் தலையிட்டு பேச்சுவார்த்தை நடத்தி இருக்கிறார். இதனால் ஆத்திரமடைந்த காவலர் சுதாகர், வைத்தியலிங்கத்தின் இருசக்கர வாகனத்தை பறிமுதல் செய்து காவல் நிலையத்திற்கு எடுத்துச் சென்றுள்ளார்.

தொடர்ந்து அங்கு வந்த முதுநகர் காவல்நிலைய ஆய்வாளர் ஏழுமலை, வைத்தியலிங்கத்தை வலுக்கட்டாயமாக காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றுள்ளார். மேலும், அவருக்கு எதிராக மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டியதாக பொய் வழக்கு பதிவு செய்து, இரவு 11 மணி வரை அவரை சட்டவிரோதமாக காவலில் வைத்துள்ளார். இது தொடர்பாக வைத்தியலிங்கம் மாநில மனித உரிமை ஆணையத்தில் புகார் அளித்தார். அந்த புகாரில், "மதுப்பழக்கமே இல்லாத எனக்கு எதிராக மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டியதாக வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இதற்கு காரணமான காவலர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று தெரிவித்திருந்தார்.

இந்த மனுவை விசாரித்த மனித உரிமை ஆணையத்தின் உறுப்பினர் கண்ணதாசன், காவல் துறை அதிகாரிகளின் செயல் மனித உரிமை மீறல் என்பது விசாரணையில் தெரிய வந்திருக்கிறது என்று கூறி வைத்தியலிங்கத்துக்கு ரூ.1 லட்சம் இழப்பீடு வழங்க தமிழக அரசு உத்தரவிட்டுள்ளார். மேலும் இந்த இழப்பீட்டுத் தொகையை முதுநகர் காவல் ஆய்வாளர் ஏழுமலை மற்றும் காவலர் சுதாகர் ஆகியோரிடம் இருந்து தலா ரூ.50 ஆயிரம் வீதம் வசூலித்துக் கொள்ள வேண்டும் என்றும் தமிழக அரசுக்கு பரிந்துரைத்துள்ளார்.

# கரூரில் போலியாக பான் கார்டு, ஆதார் கார்டு தயாரித்த இடங்களில் போலீசார் தீவிர சோதனை



கரூர், மே.9

கரூரில் போலியாக பான் கார்டு, ஆதார் கார்டு தயாரித்த இடங்களில் போலீசார் தீவிர சோதனை நடத்தி வருகின்றனர். பயங்கரவாத எதிர்ப்பு சிறப்புப் படை காவல் கண்காணிப்பாளர் பத்ரி நாராயணன் தலைமையில் நடந்த விசாரணையில் போலியாக பான், ஆதார் அட்டைகளை உருவாக்கும் குழுவைச் சேர்ந்த 6 பேர் சமீபத்தில் இங்கு கைது செய்யப்பட்டனர். கைதானவர்கள் பணிபுரிந்த இடத்தில் சிறப்புப்படை போலீசார் சோதனை நடத்தி வருகின்றனர்.

# 70 வயதில் பிளஸ் 2 தேர்வு எழுதி வெற்றி பெற்ற மூதாட்டி



கோவை, மே.9

தமிழ்நாட்டில் கடந்த மார்ச், ஏப்ரல் மாதங்களில் நடைபெற்று முடிந்த பிளஸ் 2 பொது தேர்வுகளின் முடிவுகள் வெளியிடப்பட்டிருக்கின்றன. கடந்த ஆண்டை விட அதிகமாக நடப்பாண்டில் 95.03 விழுக்காடு மாணவ மாணவிகள் வெற்றி பெற்றுள்ளனர்.

கோவையை சேர்ந்தவர் ராணி (வயது 70). இவருடைய கணவர் உயிரிழந்து விட்டார். வீட்டில் தனியாகஇருந்தஇவருக்கு படிப்பதில் ஆர்வம் ஏற்பட்டு இருக்கிறது. இதன் ஒரு பகுதியாக, வீட்டில் இருந்தபடியே பன்னிரண்டாம் வகுப்புக்கான பாடங்களை படித்து, தேர்வில் கலந்து கொண்டார். இந்நிலையில், பிளஸ் 2 பொது தேர்வு முடிவு வெளியானதில் 346 மதிப்பெண்கள் பெற்று, அவர் தேர்ச்சி அடைந்து உள்ளார்.

தமிழில் அதிகபட்சமாக 89 மதிப்பெண்களும், ஆங்கிலத்தில் 50 மதிப்பெண்களும் பெற்ற அவர், வரலாறு பாடத்தில் 52 மதிப்பெண்கள்எனமொத்தம் 346 மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி அடைந்து உள்ளார்.

# போர்ச்சூழல்: பஞ்சாப்பில் இரவில் முழு மின்தடை




அமிர்தசரஸ், மே.9

பஹல்காம் தாக்குதலுக்கு பழிதீர்க்கும் நடவடிக்கையாக பாகிஸ்தான் மீது இந்தியா சரமாரியாக ஏவுகணை தாக்குதல் நடத்தியது. 'ஆபரேஷன் சிந்தூர்' என்ற இந்த அதிரடி வேட்டையில் 9 இடங்களில் உள்ள பயங்கரவாத முகாம்கள்அழிக்கப்பட்டதோடு, 70 பேர் கொல்லப்பட்டனர்.

இந்தியாவின் தாக்குதல் நடவடிக்கைக்கு பதிலடி கொடுப்போம் என்று பாகிஸ்தான் கூறியுள்ளது. இந்த தாக்குதலை தொடர்ந்து எல்லையை ஒட்டிய பகுதிகளில் பதற்றம் நிலவுகிறது. இதனால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பஞ்சாப் மாநிலம் முழுவதும் பொது மக்கள் ஒன்று கூட தடை விதிக்கப்பட்டுள்ளது. பஞ்சாப், ராஜஸ்தானில் பாகிஸ்தான் எல்லையோரம் அமைந்துள்ள மாவட்டங்களில் உள்ள பள்ளிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இரு மாநிலங்களிலும், போலீசாரின் விடுமுறை ரத்துசெய்யப்பட்டுள்ளது. மறு அறிவிப்பு வரும் வரை காவல்துறையினர் வார விடுமுறை, விடுப்பு எடுக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. மாநிலம் முழுவதும் பாதுகாப்பு ஏற்பாடுகள் வலுப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த நிலையில், போர்ச்சூழல் பஞ்சாப் மாநிலம் குருதாஸ்பூரில் இரவில் முழுமையாக மின் விநியோகம் நிறுத்தப்படுகிறது. இரவு 9.00 முதல் காலை 5.00 வரை குருதாஸ்பூரில் முழு மின்தடை அறிவிக்கப்பட்டுள்ளது. சிறை, மருத்துவமனைகளுக்கு மின்தடைகளில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

# ரூ.2 ஆயிரம் கோடி மதிப்பிலான பிணையப் பத்திரங்கள் ஏலம் தமிழக அரசு




சென்னை, மே.9

தமிழ்நாடு அரசு மொத்தம் ரூபாய் 2,000 கோடி மதிப்பில் 10 ஆண்டுகால பிணையப் பத்திரங்கள் ரூபாய் 1,000 கோடி மற்றும் 15 ஆண்டுகால பிணையப் பத்திரங்கள் ரூபாய் 1,000 கோடி ஏலத்தின் மூலம் விற்பனை செய்ய உள்ளதாக அறிவித்துள்ளது.

இந்த ஏலம் இந்திய ரிசர்வ் வங்கியால், மும்பையில் உள்ள அதன் மும்பை கோட்டை அலுவலகத்தில் மே 13ந்தேதி நடத்தப்படும். போட்டி ஏலக்கேட்புகள் முற்பகல் 10.30 மணியில் இருந்து 11.30 மணிக்குள்ளாகவும், போட்டியற்ற ஏலக் கேட்புகள் முற்பகல் 10.30 மணியில் இருந்து 11.00 மணிக்குள்ளாகவும் இந்திய ரிசர்வ் வங்கியின் ஒருங்கிணைந்த வங்கி சேவை முறையில் [Reserve Bank of India Core Banking Solution (EKuber) System] மின்னணு படிவத்தில் (Electronic format) மே 13ந்தேதி சமர்ப்பிக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அவினாசியில் கோலாகலமாக நடைபெற்ற தேரோட்டம்



அவினாசி: மே.9

திருப்பூர் மாவட்டம் அவிநாசியில் உள்ள புகழ்பெற்ற அவிநாசிலிங்கேஸ்வரர் கோவிலில் சித்திரை தேர்த் திருவிழா கடந்த 1ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கி விமரிசையாக நடைபெற்று வருகிறது.

கடந்த 5ந்தேதி இரவு பஞ்சமூர்த்திகள் 63 நாயன்மார்களுக்கு காட்சியளித்தனர். நேற்று முன்தினம் இரவு திருக்கல்யாணம் நடந்தது. நேற்று காலை 6 மணிக்கு பஞ்சமூர்த்திகளும் பெருமாளும் திருத்தேருக்கு எழுந்தருளும் வைபவம் நடைபெற்றது. இதையடுத்து பெரிய தேரில் எழுந்தருளிய சுவாமியை பக்தர்கள் நீண்ட வரிசையில் நின்று தரிசனம் செய்தனர்.

(வியாழக்கிழமை) காலை தேரின் மேல் வீற்றிருந்த சாமிக்கு சிறப்பு பூஜை மற்றும் வழிபாடுகள் நடத்தப்பட்டு தேரோட்டம் தொடங்கியது. சிவாச்சாரியார்கள், ஆன்மீக பெருமக்கள், பக்தர்கள் 'அவிநாசியப்பா', 'அரோகரா', 'நமசிவாயா', சிவ... சிவ... என பக்தி கோஷமிட, சிவனடியார்கள் கைலாய வாத்தியம் முழங்க திருத்தேர் வடம் பிடித்து இழுக்கப்பட்டது.

திருத்தேரில் சோமாஸ்கந்தர் உமாமகேஸ்வரி சிறப்பு அலங்காரத்தில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலித்தனர்.

திருப்பூர்மாவட்டம்மட்டுமின்றி கோவை, ஈரோடு உள்பட தமிழகத்தின் பல்வேறு இடங்களில் இருந்தும் வந்திருந்த பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் தேரை வடம் பிடித்து இழுத்தனர். கோவில் முகப்பில் இருந்து புறப்பட்ட தேரானது சிறிது தொலைவு இழுத்து செல்லப்பட்டு நிறுத்தப்பட்டது. நாளை 9ம் தேதி காலை 9 மணிக்கு மீண்டும் திருத்தேர் வடம் பிடித்து மாலை 4 மணி அளவில் நிலை வந்து சேர உள்ளது.

10ந் தேதி அம்மன் தேரோட்டம் நடக்கிறது. 11ந்தேதி மாலை வண்டித்தாரை, பரிவேட்டையும் 12ந்தேதி தெப்ப தேர் உற்சவமும் நடக்கிறது. 13ந்தேதி மகா தரிசன விழாவும், 14ந்தேதி மஞ்சள் நீர் விழாவும் நடக்கிறது.

# வெள்ளியங்கிரி ஆண்டவர் கோவிலுக்கு மேலும் ஒரு கும்கி யானை வரவழைப்பு




கோவை, மே.9

கோவையை அடுத்த மேற்குதொடர்ச்சி மலை அடிவாரத்தில் பூண்டி வெள்ளியங்கிரி ஆண்டவர் கோவில் உள்ளது. இங்கிருந்து 7வது மலையில் சுயம்புவாக தோன்றிய சிவனை தரிசிக்க வனத்துறை சார்பில் ஆண்டுதோறும் பிப்ரவரி, மார்ச், ஏப்ரல், மே ஆகிய 4 மாதங்களில் பக்தர்களுக்கு அனுமதி அளிக்கப்படும்.

அதன்படி தற்போது வெள்ளியங்கிரி ஆண்டவரை தரிசிக்க கோவை மட்டுமின்றி வெளிமாவட்டங்களைசேர்ந்த ஆயிரக்கணக்கான பக்தர்கள் வருகின்றனர். அவர்கள், 7 மலை ஏறி வெள்ளியங்கிரி ஆண்டவரை தரிசித்து செல்கின்றனர். அங்கு வரும் பக்தர்களுக்கு கோவில் வளாகத்தில் அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது. இதில் மீதம் ஆகும் உணவு ஆங்காங்கே கொட்டப்படுவதாக கூறப்படுகிறது.


இதனால் வனப்பகுதியை விட்டு வெளியே வரும் காட்டு யானைகள், கோவில் வளாகத்தில் உள்ள உணவு கூடத்தில் இருந்த பொருட்களை தின்றும், அங்குள்ள கடைகளை சேதப்படுத்தியும் அட்டகாசம் செய்து வருகின்றன. இதனால் கோவிலுக்கு வரும் பக்தர்கள் அச்சப்படும் நிலை உள்ளது. கோவில் வளாகத்துக்கு வரும் காட்டு யானைகளை விரட்ட வனத்துறையினர் தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகின்றனர். யானைகள் வருவதை தடுக்க கோவிலை சுற்றி பெரிய அகழி தோண்டி தடுப்பு ஏற்படுத்தினர். ஆனாலும் காட்டு யானைகள் வருவது தொடர் கதையாக உள்ளது.

இதனையடுத்து, பூண்டி வெள்ளியங்கிரி ஆண்டர் கோவிலுக்கு வரும் பக்தர்களை பாதுகாக்கவும், காட்டு யானைகளைவிரட்டவும் வசதியாக பொள்ளாச்சியை அடுத்த டாப்சிலிப்பில் இருந்து நரசிம்மன் என்ற கும்கி யானை கடந்த 2ம் தேதி வரவழைக்கப்பட்டது. அந்த கும்கி யானை கோவில் வளாகத்தில் நிறுத்தப்பட்டு உள்ளது.

இந்த நிலையில், வெள்ளிங்கிரி மலைக்கு வரும் பக்தர்களின் பாதுகாப்புக்காக ஏற்கனவே நரசிம்மன் என்ற கும்கி யானை வரவழைக்கப்பட்ட நிலையில், தற்போது கூடுதலாக சின்னத்தம்பி என்ற கும்கி யானையும் வரவழைக்கப்பட்டுள்ளது.

இதனால் பக்தர்கள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

# பிளஸ் 2 பொதுத்தேர்வில் பழனி மாணவி 599 மதிப்பெண்கள் எடுத்து சாதனை




திண்டுக்கல், மே.9

திண்டுக்கல் மாவட்டம், பழனியைசேர்ந்தமாணவி ஓவியாஞ்சலி பிளஸ் 2 பொதுத்தேர்வில் 600க்கு 599 மதிப்பெண்கள் எடுத்து மாவட்ட அளவில் முதலிடமும், மாநில அளவில் 2வது இடமும் பிடித்து சாதனை படைத்துள்ளார். தமிழ், பொருளாதாரம், வணிகவியல், கணக்குபதிவியல், கணினி பயன்பாடு ஆகிய 5 பாடங்களில் தலா 100 மதிப்பெண்களும் ஆங்கிலத்தில் 99 மதிப்பெண்களும் எடுத்துள்ளார். பழனி பாரத் வித்யா பவன் பள்ளியைச் சேர்ந்த இந்த மாணவிக்கு ஆசிரியர்கள், பெற்றோர், மாணவமாணவிகள் ஆகியோர் வாழ்த்துகளை தெரிவித்துள்ளனர்.

# திண்டுக்கல்: விபத்தில் உயிரிழந்த மாணவன் பிளஸ் 2 பொதுத்தேர்வில் 443 மதிப்பெண்கள் பெற்றார்



திண்டுக்கல் மே.9

திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் அருகே உள்ள மல்வார்பட்டி ஊராட்சி ஒத்தையூரை சேர்ந்தவர் பாலமுருகன். இவர் வேடசந்தூரில் கரும்பு ஜூஸ் கடை வைத்துள்ளார். இவரது மனைவி அமராவதி வேடசந்தூர் ஊராட்சி ஒன்றிய தொடக்க பள்ளியில் சத்துணவு ஒருங்கிணைப்பாளராக வேலை பார்த்து வருகிறார். இவர்களுக்கு சுகுமார் என்ற மகனும் சுபாஷினி என்ற மகளும் உள்ளனர். சுபாஷினி மாரம்பாடியில் உள்ள பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் பிளஸ் 1 படித்து வருகிறார்.

சுகுமார் (வயது 18) திண்டுக்கல்லில் உள்ள தனியார் பள்ளியில் பிளஸ் 2 கம்ப்யூட்டர் அப்ளிகேஷன் குரூப் படித்து பொதுத்தேர்வு எழுதியிருந்தார்.

இந்த நிலையில் கடந்த ஏப்ரல் 6ம் தேதி சுகுமார் மோட்டார் சைக்கிளில் வேடசந்தூர் சந்தைக்கு சென்று காய்கறி வாங்கி விட்டு ஊருக்கு திரும்பும்போது, தட்டாரப்பட்டி பிரிவு அருகே ஆட்டோ மோதி படுகாயம் அடைந்தார். இதனையடுத்து குடும்பத்தினர் அவரை மீட்டு மதுரையில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தனர். தீவிர சிகிச்சைப் பிரிவில் இருந்த சுகுமார் சிகிச்சை பலனின்றி கடந்த ஏப்ரல் 21ம் தேதி உயிரிழந்தார்.

இந்த நிலையில் இன்று பிளஸ் 2 பொதுத்தேர்வு முடிவுகள் வெளியானது. அதில் சுகுமார் 600க்கு 443 மதிப்பெண்கள் (74 சதவீதம்) பெற்றுள்ளார். சிறுவயது முதலே கம்ப்யூட்டர் என்ஜினீயர் ஆக வேண்டும் என்ற கனவில் நன்றாக படித்து தற்போது நல்ல மதிப்பெண்கள் பெற்றுள்ள நிலையில், சாலை விபத்தில் மாணவன் பலியான சம்பவம் அந்தபகுதியில்சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# சித்திரை முழு நிலவு மாநாடு: பாமகவினருக்கு கட்டுப்பாடு விதித்த போலீசார்



சென்னை, மே.9

12 ஆண்டுகளுக்கு பிறகு "சித்திரை முழுநிலவு மாநாடு 2025" வருகிற 11 ம் தேதி நடைபெறவுள்ளது. மாமல்லபுரத்தில் நடக்கவுள்ள இம்மாநாட்டிற்கான முன்னேற்பாடுகள் மும்முரமாக நடைபெற்று வருகிறது. இம்மாநாட்டிற்கான சிறப்பு பாடல்கள், லட்சினை ஆகியவை வெளியானது. தொடர்ந்து இம்மாநாட்டையொட்டி செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள அனைத்து மதுபான கடைகள் மற்றும் மதுபான கூடங்களை மூட மாவட்ட ஆட்சியர் உத்தரவிட்டுள்ளார்.

இந்த நிலையில், சித்திரை முழு நிலவு மாநாட்டிற்கு வரும் வாகனங்கள் மற்றும் வழித்தடங்கள் குறித்து 10 அறிவுரைகளை செங்கல்பட்டு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் வெளியிட்டுள்ளார்

காவல்துறை வெளியிட்டுள்ள அறிவுரைகள் பின் வருமாறு:

1. சித்திரை முழுநிலவு பெருவிழாவிற்கு வருபவர்கள் வாகனங்களின் ஆவணங்களை சமர்ப்பித்து பாஸ் பெற்றே மாநாட்டிற்கு வரவேண்டும். பாஸ் இல்லாத வாகனங்கள் செங்கல்பட்டு மாவட்டத்திற்குள் அனுமதிக்கப்படமாட்டாது.

2. மாநாட்டிற்கு வரும் வாகனங்கள் மாவட்ட காவல்துறையின் அறிவுறுத்தலுக்கேற்ப அனுமதிக்கப்பட்ட வழித்தடங்களில் மட்டுமே செல்ல வேண்டும். தடைசெய்யப்பட்ட வழித்தடங்களில் செல்லக்கூடாது.

3. குறிப்பாக கடலூர், விழுப்புரம், நாகப்பட்டினம் மற்றும் மயிலாடுதுறை உள்ளிட்ட மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேசம் உள்ளிட்ட இடங்களிலிருந்து மாநாட்டிற்கு வரும் வாகனங்கள் ஈ.சி.ஆர். வழியாக மாநாட்டிற்கு வர தடை விதிக்கப்பட்டுள்ளது. அவர்கள் ஜிஎஸ்டி சாலை வழியாக வர வேண்டும்.

4.மாநாட்டிற்கு வருபவர்கள் இருசக்கர வாகனங்களில் வருவது தடைசெய்யப்பட்டுள்ளது.

5. மாநாட்டிற்கு வருபவர்கள் வரும்போதும் திரும்பிச் செல்லும்போதும் மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டுவதோ பொது இடங்களில் மது அருந்துவதோ கூடாது.

6.11.05.2025 ம் தேதியோ அதற்கு முன்போ ஜோதி ஓட்டம் போன்ற நிகழ்வுகள் எங்கும் நடத்திட அனுமதி கிடையாது.

7. மாநாட்டிற்கு வாகனங்களில் வரும் நபர்கள் சாலைகளிலேயே வாகனங்களை நிறுத்தி இறங்கினால் போக்குவரத்து ஸ்தம்பிக்கும் என்பதால் வாகன நிறுத்துமிடங்களில் மட்டுமே வாகனத்தை நிறுத்தி இறங்க வேண்டும்.

8. மாநாட்டுத் திடலுக்கு அருகாமையில் கிழக்குக் கடற்கரை சாலையில் போக்குவரத்து நெரிசலை தவிர்க்கவும், கடல் நீரில் விபத்துக்களை தவிர்க்கவும் பங்கேற்பாளர்கள் மாநாட்டுத் திடலுக்கு அருகாமையிலுள்ள கடற்கரைக்கு செல்ல அனுமதி கிடையாது.

9. அன்றைய தினம் ஈ.சி. ஆர். சாலையில் போக்குவரத்து நெரிசல் ஏற்படக்கூடும் எனவே பொதுமக்கள் ஈ.சி.ஆர். சாலையில் பயணத்தை தவிர்த்திட அறிவுறுத்தப்படுகிறது. மேலும் சுற்றுலாப் பயணிகள் மற்றும் பொதுமக்கள் மாமல்லபுரம் மற்றும் பிற சுற்றுலாத்தலங்களை தவிர்த்திட கேட்டுக்கொள்ளப்படுகிறது.

10. அன்றைய தினம் திருவண்ணமலைக்கு பெருமளவில் வாகனம் போக்குவரத்து இருக்குமாதலால் ஜிஎஸ்டி (NH45) சாலையிலும் போக்குவரத்து நெரிசல் இருக்கும். எனவே சென்னையிலிருந்து மேற்கு மற்றும் தென் மாவட்டங்களுக்கு செல்லும் கனரக மற்றும் சரக்கு வாகனங்கள் ஸ்ரீபெரும்புதூர், வேலூர், திருப்பத்தூர், சேலம் வழித்தடத்தினையும் மறுமார்க்கத்தில் சேலம் திருப்பத்தூர், வேலூர் வழித்தடத்தினையும் பயன்படுத்திட கேட்டு கொள்ளப்படுகிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# தூத்துக்குடியில் முகநூல் லிங்க் மூலம் ரூ.17.50 லட்சம் மோசடி: ரூ.2 லட்சம் மீட்பு

தூத்துக்குடி மே.9

தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவருக்கு முகநூல் (Face book)பக்கத்தில்ஆன்லைன் டிரேடிங் மூலம் அதிக லாபம் பெறலாம் என லிங்க் வந்துள்ளது. இதனையடுத்து அவர் அந்த லிங்க்ஐ கிளிக் செய்ததில் அது ஒரு வாட்ஸ்அப் (WhatsApp) குரூப்பில் இணைத்துள்ளது. பின்னர் மேற்சொன்ன நபர் அந்த வாட்ஸ்அப் எண்ணை தொடர்புகொண்டுபேசிய போது அந்த மர்ம நபர் US PRO என்னும் ஆன்லைன் டிரேடிங் செயலியின் லிங்க் அனுப்பி அதில் முதலீடு செய்தால் அதிக லாபம் பெறலாம் என ஆசை வார்த்தை கூறியுள்ளார். பின்னர் மேற்சொன்ன நபர் அதனை பதிவிறக்கம் செய்து சிறிய முதலீடு செய்து சிறிய லாபம் பெற்றுள்ளார். பின்னர் அதிக முதலீடு செய்தால் அதிக லாபம் பெறலாம் என அந்த மர்ம நபர்கள் கூறியதையடுத்து பல்வேறுதவணைகளாக மொத்தம் ரூ.17 லட்சத்து 50 ஆயிரம் பணத்தை முதலீடு செய்துள்ளார்.




இதனையடுத்து மேற்சொன்ன நபர் முதலீடு செய்த பணத்திற்கு லாபம் வரவில்லை என்று அந்த மர்மநபர்களிடம்தொடர்பு கொண்டபோது அவர்கள் கூடுதலாக பணத்தை கட்டினால்தான் லாபம் கிடைக்கும் என்று வற்புறுத்தியுள்ளனர். பின்னர் தான் மோசடி செய்யப்பட்டதை அறிந்த மேற்சொன்ன நபர் இதுகுறித்து NCRPல் (National Cyber crime Reporting Portal) புகார் பதிவு செய்துள்ளார்.

அந்த புகாரின் அடிப்படையில் மாவட்ட எஸ்.பி. ஆல்பர்ட் ஜான் உத்தரவுப்படி, தூத்துக்குடி சைபர் குற்றப்பிரிவு ஏ.டி. எஸ்.பி. சகாய ஜோஸ் மேற்பார்வையில் சைபர் குற்றப் பிரிவு போலீசார் தொழில் நுட்ப ரீதியாக விசாரணைமேற்கொண்டு மோசடிக்கு பயன்படுத்தப்பட்ட வங்கிகணக்குகளைகண்டறிந்துஅவற்றை முடக்கம் செய்து நடவடிக்கை மேற்கொண்டு, அதில் ரூ.2 லட்சம் பணம் திரும்ப பெறப்பட்டு மீட்கப்பட்டது. மேலும் மீதி பணத்தை மீட்கவும், குற்றவாளிகளை கண்டுபிடித்து கைது செய்யவும் சைபர் குற்றப்பிரிவு போலீசார்சட்டரீதியாக தொடர்ந்து நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில் மீட்கப்பட்ட ரூ.2 லட்சம் பணத்தை நேற்று (7.5.2025) மாவட்ட எஸ்.பி. ஆல்பர்ட் ஜான் அதன் உரிமையாளரிடம் ஒப்படைத்தார்.

மேலும் அவர், இதுபோன்று பகுதி நேர வேலை, ஆன்லைனில் முதலீடு செய்தால் அதிக லாபம், ஸ்டார் ரேட்டிங் கொடுப்பதன் மூலம் பணம் சம்பாதிக்கலாம் என்று இணையதளம், பேஸ்புக், வாட்ஸ்அப், டெலிகிராம் போன்றவற்றின் மூலம் வரும் போலியான விளம்பரங்களை நம்பி அதில் வரும் லிங்குகளை கிளிக் செய்ய வேண்டாம் என்றும், இளைஞர்கள் பெண்கள் ஆகியோர் இதுபோன்ற போலியான விளம்பரங்களை தவிர்த்து சைபர் குற்றங்களிலிருந்து தற்காத்துக் கொள்ள வேண்டும் என்றும் பொதுமக்களுக்கு தெரிவித்துள்ளார்.

# ஒலகடம் ராஜராஜேஸ்வரி சொக்கநாச்சியம்மன் கோவிலில் சித்திரை திருவிழா



ஈரோடு மே.9

அம்மாபேட்டை அருகே உள்ள ஒலகடத்தில்ராஜராஜேஸ்வரிசொக்கநாச்சியம்மன், மாரியம்மன், அக்கரைபட்டி முனியப்பன் ஆகிய பிரசித்தி பெற்ற கோவில்கள் உள்ளன. இக்கோவில்களின் வருடாந்திர சித்திரைத் திருவிழா கடந்த மாதம் 24ம் தேதி பூச்சாட்டுதலுடன் தொடங்கியது. 26ம் தேதி கம்பம் நடுதல் எரிகரும்பு கொண்டு வருதல் நிகழ்ச்சியும் நடைபெற்றது

மே 6ம் தேதி பெருமாள், ஈஸ்வரர் மற்றும் துணை தெய்வங்களை ராஜேஸ்வரி சொக்கநாச்சியம்மன் ஆலயத்திற்கு அழைத்து வரும் நிகழ்ச்சி நடைபெற்றது.

விழாவின் முக்கிய நிகழ்வாக நேற்று அக்கினி அபிஷேகம் நடைபெற்றது. அதன் பின்னர் அம்மை அழைத்தல், குண்டம் இறங்கும் நிகழ்ச்சி (தீ மிதித்தல்) நடைபெற்றது. முதலில் கோவில் பூசாரி பூக்களை குண்டத்தில் தூவி 60 அடி நீளமுள்ள குண்டத்தில் இறங்கினார். அதன் பின்னர் ஏராளமான பக்தர்கள் தீ மிதித்து நேர்த்திக்கடன் செலுத்தினர்.

அதனை அடுத்து பொங்கல்வைக்கும்நிகழ்ச்சியும், ராஜேஸ்வரி சொக்கநாச்சியம்மன் அலங்கரிக்கப்பட்ட திருத்தேரில் உலாவரும் நிகழ்ச்சியும் நடைபெற்றது. இரவு வாண வேடிக்கைகளுடன் சுவாமி திருவீதி உலா நடைபெற்றது.

கம்பம் பிடுங்குதல், மஞ்சள்நீர்உற்சவம் ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. வரும்13ம் தேதி மறு பூஜையுடன் விழா நிறைவுபெறுகிறது.

# விற்பனைக்கு மறைத்து வைத்திருந்த 150 கிலோ புகையிலை பொருட்கள் பறிமுதல்



தஞ்சாவூர், மே.9

தஞ்சாவூர் மாவட்டம் செங்கிப்பட்டி பகுதியில் அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் விற்பனை செய்யப்படுவதாக போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இதைத்தொடர்ந்து தஞ்சாவூர் மாவட்ட போலீசார் செங்கிப்பட்டி பகுதியில் பூதலூர் போலீசார் தீவிர சோதனையில் ஈடுபட்டனர்.

அப்போது செங்கிப்பட்டிஅருகேகூனம்பட்டி வடக்குத்தெருவை சேர்ந்த தங்கவேல் மகன் காளிதாஸ் (வயது29) தன் வீட்டில் அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் பதுக்கி வைத்திருந்தது தெரிய வந்தது.

இதைத்தொடர்ந்து அங்கு சென்ற போலீசார் காளிதாஸ் வீட்டில் இருந்து சுமார் 150 கிலோ எடையுள்ள புகையிலை பொருட்களை பறிமுதல் செய்தனர். மேலும் இது குறித்து செங்கிப்பட்டி போலீசார் வழக்குப்பதிவு செய்து தலைமறைவான காளிதாஸை தேடி வருகின்றனர்.

# ஆண்டிபட்டி துடைப்பத்தால் அடித்துக்கொள்ளும் மாமன் மைத்துனர்கள்

ஆண்டிபட்டி துடைப்பத்தால் அடித்துக்கொள்ளும் மாமன் மைத்துனர்கள் தேனி மாவட்டம் ஆண்டிப்பட்டி அருகே உள்ள மறவம்பட்டி கிராமத்தில் முத்தாலம்மன் கோவில் சித்திரை திருவிழாவை முன்னிட்டு அப்பகுதியே சேர்ந்த மாமன் மைத்துனர்கள் ஒருவருக்கொருவர் துடைப்பத்தால் அடித்துக் கொள்ளும் வினோதநிகழ்ச்சி நடந்தது இந்த நிகழ்ச்சியில் மாமன் மைத்துனர்கள்ஒருவருக்கு ஒருவர் துடைப்பத்தால் அடித்துக் கொண்டு விழாவை ஊர் மக்கள் சிறப்பாக கொண்டாடினர்

# சென்னை: தொழில் முனைவோருக்கு மே 14 முதல் 3 நாட்கள் வீட்டு பராமரிப்பு பொருட்கள் தயாரித்தல் பயிற்சி




சென்னை, மே.9

தமிழக அரசின் தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:

தமிழக அரசின் தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் சென்னையில், வீட்டு பராமரிப்பு பொருட்கள் தயாரித்தல் மற்றும் தொழிற்சாலைக்கு உதவும் ராசயான பொருட்கள் தொடர்பான பயிற்சி வரும் 14.5.2025 முதல் 16.5.2025 தேதி வரை 3 நாட்கள் காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெற உள்ளது.

இப்பயிற்சியில் பிளாக் ஃபீனைல், கட்டிங் ஆயில், கிரீஸ், தொழில்துறை சோப்பு எண்ணெய், பைப் கிளீனிங் பவுடர், வாட்டர் டேங்க் கிளீனிங் லிக்விட், டிஷ்வாஷ் சோப், டிடர்ஜென்ட் சோப், டெட்டால், எஸ்எஸ் மெட்டல் கிளீனிங் லிக்விட், கார் பாலிஷ் மற்றும் இன்டஸ்ட்ரியல் ஃப்ளோர் க்ளீனிங், ஃப்ளோர் கிளீனர், டிஷ்வாஷ் திரவம், சோப்பு திரவம், ஃபேப்ரிக் சாஃப்ட்னர் & கண்டிஷனர், கை கழுவும் திரவம் மற்றும் பயிற்சி வழிமுறைகளுடன் சுயமாக தொழில் தொடங்குவதற்கு இந்த பயிற்சி மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

இப்பயிற்சியில் ஆர்வமுள்ளவர்கள் (ஆண்/ பெண்) 18 வயதுக்கு மேற்பட்ட குறைந்தபட்ச கல்வித் தகுதி 10ம் வகுப்பு தேர்ச்சியாளர்கள் விண்ணப்பிக்கலாம். பங்குபெறும் ஆண், பெண் பயனாளிகளுக்கு குறைந்த வாடகையில் குளிரூட்டப்பட்ட தங்கும் விடுதி உள்ளது தேவைப்படுவோர் இதற்கு விண்ணப்பித்து பெற்றுக் கொள்ளலாம். இப்பயிற்சி பற்றிய கூடுதல் விவரங்களை பெற விரும்புவோர் www.editn.in என்ற வலைத்தளத்தில் தெரிந்து கொள்ளலாம்.

மேலும் விவரங்களுக்கு அலுவலக வேலை நாட்களில் (திங்கள் முதல் வெள்ளி வரை) காலை 10 மணி முதல் மாலை 5.45 மணி வரை தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், சிட்கோ தொழிற்பேட்டை, இடிஐஐ அலுவலகச் சாலை, ஈக்காட்டுத்தாங்கல், சென்னை 600 032 என்ற முகவரியிலும், 8668102600 என்ற கைபேசி எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம்.

இப்பயிற்சியில் சேர்வதற்கு முன்பதிவு அவசியம். இப்பயிற்சியில் சேர்வோருக்கு அரசு சான்றிதழ் வழங்கப்படும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# பிளஸ் 2 தேர்வில் தேர்ச்சி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு வாழ்த்துகள் ரா.முத்தரசன்



சென்னை, மே.9

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் ரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:

தமிழ்நாட்டில் பிளஸ் 2 தேர்வு எழுதிய மாணவ, மாணவியர்களில் 95.03 சதவீதம் பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர். இவர்கள் அனைவரும் பள்ளிக் கல்வியை நிறைவு செய்து உயர்கல்விக்கு செல்கிறார்கள். அனைவரும் அவரவர் துறையில் முன்னேறி முத்திரை பதிக்க வேண்டும் என வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம். தேர்ச்சி விகிதம் கடந்த ஆண்டை விட சற்று அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.

இதில் கணினி அறிவியல் பாடம் அதிகபட்ச மாணவர்களை ஈர்த்திருப்பது கவனத்தில் கொள்ள தக்கது. தமிழ் பாடத்தில் 135 மாணவர்கள் மட்டுமே நூற்றுக்கு நூறு மதிப்பெண் பெற்றிருப்பதை கருத்தில் கொண்டு, அதில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகிறது. அரசுப் பள்ளிகளில் அதிகபட்ச மாணவர் தேர்ச்சி பெற்றுள்ள அரியலூர், ஈரோடு, திருப்பூர், கன்னியாகுமரி, கடலூர் மாவட்ட அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் சிறப்பு வாழ்த்துக்கள்.

ஏதேனும் ஒரு பாடப்பிரிவில் குறைந்தபட்ச மதிப்பெண் கிடைக்காத நிலையில் 39 ஆயிரத்து 352 மாணவ, மாணவியர் தேர்ச்சி பெற இயலவில்லை. இவர்கள் மனம் தளராமல் வரும் ஜூன் 25 ஆம் தேதி நடைபெறும் துணைத் தேர்வில் பங்கேற்று, வெற்றி பெற முடியும் என்ற நம்பிக்கையுடன் முன்னேறி செல்ல வேண்டும். பத்தாயிரத்து 49 மாணவ, மாணவியர் தேர்வில் பங்கேற்க முடியாமல் போய்விட்டது.

இந்த மாணவர்கள் பயின்ற பள்ளி நிர்வாகம் மாணவர்களுக்கு சிறப்புப் பயிற்சி அளித்து, துணைத் தேர்வில் பங்கேற்க முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். இந்த தேர்வில் பங்கேற்ற அனைவரும் எதிர்காலத்தில் நல்ல பலனையும், உயர்வையும் பெற முடியும் என்ற நம்பிக்கையுடன் முன்னேற வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழுவின் சார்பில் வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# சென்னை விமானநிலையத்தில் 10 விமானங்கள் ரத்து




சென்னை, மே.9

இந்தியா பாகிஸ்தான் எல்லையில் போர் பதற்றம் காரணமாக வான் மண்டல கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக விமான சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளது. அதன்படி, சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் இருந்து செல்லும் 5 விமானங்களும் சென்னைக்கு வரும் 5 விமானங்களும் தற்போது ரத்து செய்யப்பட்டுள்ளது. விமானத்தில் பயணம் செய்யக் கூடிய பயணிகள் விமான நிறுவனத்தை தொடர்பு கொண்டு வழிமுறைகளை உறுதி செய்த பின்னர் பயணத்தை மேற்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மறு உத்தரவு வரும் வரை இந்த திட்டம் அமலில் இருக்கும் என விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# தேர்வில் வெற்றி பெற்று, உயர் கல்விக்குச் செல்லவிருக்கும் அனைவருக்கும் வாழ்த்துகள் அண்ணாமலை



சென்னை, மே.9

தமிழக முன்னாள் பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது:

பன்னிரண்டாம் வகுப்பு பொதுத்தேர்வு முடிவுகள் இன்று வெளியாகியிருக்கின்றன. தேர்வில் வெற்றி பெற்று, உயர் கல்விக்குச் செல்லவிருக்கும் மாணவ மாணவியர் அனைவருக்கும் மனமார்ந்த வாழ்த்துகளைத்தெரிவித்துக்கொள்கிறேன்.

தேர்வில் வெற்றி வாய்ப்பை இழந்தவர்கள் துவண்டு விடாமல், வரும் ஜூன் மாதம் நடைபெறவிருக்கும் துணை நிலைத் தேர்வுக்கு, முழு நம்பிக்கையுடன் தங்களைத் தயார் செய்து, தேர்வை எதிர்கொண்டு வெற்றி பெறவும் இறைவனை வேண்டிக் கொள்கிறேன்.

பல்வேறு வாய்ப்புகளும், புதிய துறைகளும் உருவாகியிருக்கும் இந்தக் காலகட்டத்தில், மாணவ மாணவியர் அனைவருக்கும் சிறப்பானதொரு எதிர்காலம் காத்திருக்கிறது.

மாணவ, மாணவியர் அனைவரும், உயர்கல்வியில் தாங்கள் விரும்பும் துறையைத் தேர்ந்தெடுத்து, சாதனை படைக்க இறைவன் அருள் புரியட்டும்.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# பாகிஸ்தானில் பயங்கரவாதிகள் மீதான மின்னல் வேகத் தாக்குதல் வைகோ வரவேற்பு



சென்னை, மே.9

மதிமுக பொதுச்செயலாளர் வைகோ கூறியிருப்பதாவது:

பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் உள்ள பயங்கரவாத முகாம்கள் மீது இந்தியா நேற்று தாக்குதல் நடத்தியது, 'ஆபரேஷன் சிந்தூர்' என்று அழைக்கப்படும் இத்தாக்குதல் மூலம் 9 தீவிரவாத தளங்களை இலக்குகளாக கொண்டு அழிக்கப்பட்டிருக்கின்றன. காஷ்மீரில் ஏப்ரல் 22 ஆம் தேதி பஹல் காமில் தீவிரவாதிகள் அப்பாவி சுற்றுலாப் பயணிகள் மீது துப்பாக்கி சூடு நடத்தினர். இதில் 26 பேர் கொல்லப்பட்டனர்.

இதற்கு பதிலடிக் கொடுக்கும் வகையில் பயங்கரவாதத்திற்கு எதிராக நமது இந்தியா ராணுவம் திட்டமிட்டு மின்னல் வேகத்தில் சென்று பாகிஸ்தானில் உள்ள தீவிரவாத இலக்குகளை துல்லியமாக தாக்கி அழித்து இருக்கிறது. இந்தியாவின் பாதுகாப்புக்கும் இறையாண்மைக்கும் அச்சுறுத்தலாக விளங்குகிற பயங்கரவாதிகளுக்கு இந்திய அரசு பாடம் புகட்டி உள்ளது வரவேற்கத்தக்க நடவடிக்கை ஆகும்.

பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் உள்ள தீவிரவாதிகளின் முகாம்களை ராணுவம் தாக்கியுள்ளது. அங்கிருந்துதான் இந்தியாவிற்கு எதிரான பயங்கரவாத தாக்குதல்கள் திட்டமிடப்பட்டு இயக்கப்பட்டன. "பாகிஸ்தானிய ராணுவ இலக்குகள் எதுவும் குறிவைக்கப்படவில்லை. இலக்குகளைத் தேர்ந்தெடுப்பதிலும் செயல்படுத்தும் முறையிலும் இந்தியா கணிசமான நிதானத்தைக் காட்டியுள்ளது" என்று இந்திய ராணுவம் அறிவித்திருப்பது ஆறுதல் தருகிறது.

பாகிஸ்தான் மீது போர் தொடுத்து, அதனால் அப்பாவி மக்கள் கொடும் துயரத்திற்கு ஆளாகும் நிலையை எந்த சூழ்நிலையிலும் இந்திய அரசு உருவாக்கிவிடக்கூடாது. போர் மூண்டால் இந்தியா ,பாகிஸ்தான் இரு நாடுகளும் கடுமையான பாதிப்பை சந்திக்க நேரிடும் என்பதையும் இந்திய அரசு உணர்ந்து செயல்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்" இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

தினகனி
Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253
9.5.2025

## 17 வயது சிறுமிக்கு பெண் குழந்தை: தொழிலாளி மீது போக்சோ வழக்கு

மதுரை, மே.9

மதுரைஅருகே உள்ள ஒரு கிராமத்தை சேர்ந்தவர் பிரசன்னா (25). கொத்தனார். இவர் 17 வயது சிறுமியிடம் காதலிப்பதாக ஆசை வார்த்தை கூறி பழகினார். மேலும் அவரை திருமணம் செய்து மதுரையில் வாடகை வீட்டில் தங்கி குடும்பம் நடத்தி வந்ததாக கூறப்படுகிறது.

இதற்கிடையே அந்த சிறுமி கர்ப்பம் ஆனார்.

சிறுமிக்கு பிரசவ வலி ஏற்படவே அவர் மதுரை அரசு ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார். அங்கு சிறுமிக்கு பெண் குழந்தை பிறந்தது.

இதுகுறித்து அறிந்த மதுரை மேற்கு யூனியன் ஊர்நல அலுவலர் செல்வி, சமயநல்லூர் அனைத்து மகளிர் போலீசில் புகார் அளித்தார். அதன்பேரில் போலீசார் விசாரணை நடத்தி, பிரசன்னா மீது போக்சோ சட்டத்தில் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## திருவண்ணாமலையில் 12ந் தேதி டாஸ்மாக் கடைகள் மூடல்

திருவண்ணாமலை, மே.9

திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோவிலில் நடைபெறும் முக்கிய விழாக்களில் சித்ரா பவுர்ணமியும் ஒன்றாகும். சித்ரா பவுர்ணமி வருகிற 11ந் தேதி இரவில் தொடங்கி 12ந் தேதி இரவில் நிறைவடைகின்றது. லட்சக்கணக்கான பக்தர்கள் அன்றைய தினம் கிரிவலம் செல்ல உள்ளனர்.

இதையொட்டி திருவண்ணாமலை தாலுகா மற்றும் நகர பகுதிக்கு அருகாமையில் இயங்கி வரும் திருவண்ணாமலை காமராஜர் சிலை அருகில் உள்ள டாஸ்மாக் மதுபான கடை, மணலூர்பேட்டை சாலையில் உள்ள டாஸ்மாக் மதுபான கடை, வேங்கிக்கால் புறவழிச்சாலையில் உள்ள டாஸ்மாக் மதுபான கடை, சமுத்திரம் பகுதியில் உள்ள மதுபான கடை, திருவண்ணாமலை நகரத்தில்




இயங்கி வரும் மதுபான கடைகளுடன் இணைந்த மதுக் கூடங்கள் மற்றும் முன்னாள் ராணுவ வீரர்களுக்கான அங்காடி, வேங்கிக்கால் எம்.எல். 4 ஏ உரிமம் பெற்ற மதுபான கடைகள், மதுக்கூடங்களுக்கு வருகிற 12ந் தேதி (திங்கட்கிழமை) மது விற்பனை நடைபெறாமல் விடுமுறை அளிக்கப்பட்டு மூடப்படும்.

இந்த தகவலை திருவண்ணாமலை மாவட்ட கலெக்டர் தர்ப்பகராஜ் தெரிவித்து உள்ளார்.

## யூடியூப் பார்த்து கல்லூரி மாணவிக்கு பிரசவம் பார்த்த வாலிபர்: விசாரணையில் பரபரப்பு தகவல்

ஈரோடு, மே.9

ஈரோடு மாவட்டம் கோபியில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனைக்கு வாலிபர் ஒருவர் இளம்பெண் ஒருவரை நேற்று சிகிச்சைக்காக அழைத்து வந்தார். டாக்டர்கள் பரிசோதனை செய்த போது அந்த பெண்ணுக்கு பிரசவம் ஆகியிருந்ததையும், ரத்தப்போக்கு அதிக அளவில் ஏற்பட்டு இருந்ததும் தெரிந்தது.

உடனே சிகிச்சை அளித்த டாக்டர்களுக்கு அந்த வாலிபரும், இளம்பெண்ணும் கணவன்மனைவி தானா? என்று சந்தேகம் ஏற்பட்டது. இதனால் இதுகுறித்து கோபி நகர அரசு ஆரம்ப சுகாதார நிலைய டாக்டர் பொன்மணிக்கு தகவல் கொடுத்தனர். இதையடுத்து பொன்மணி மருத்துவத் துறை அதிகாரிகளுடன் தனியார் மருத்துவமனைக்கு சென்று வாலிபரிடமும், சிகிச்சை பெற்றும் வரும் இளம்பெண்ணிடமும் விசாரணை நடத்தினார். அப்போது பரபரப்பு தகவல்கள் வெளிவந்தன.

அதன் விவரம் வருமாறு:

திருப்பூர் மாவட்டம் அவினாசியை சேர்ந்த 20 வயதுடைய வாலிபர் ஒருவர் தன்னுடைய தாயார் மற்றும் 19 வயதுடைய இளம் பெண்ணுடன் கடந்த ஆண்டு கோபி கச்சேரிமேடு சீத்தாம்மாள் காலனியில் உள்ள வீட்டுக்கு குடிவந்துள்ளார். இளம் பெண் கோவையில் உள்ள ஒரு தனியார் கல்லூரியில் தங்கி படித்து வந்துள்ளார். அப்போது வாலிபருக்கும், அந்த மாணவிக்கும் பழக்கம் ஏற்பட்டு காதல் மலர்ந்துள்ளது. இருவரும் திருமணம் ஆகாமலேயே கணவன் மனைவி போல் சேர்ந்து வாழ்ந்துள்ளனர்.




இதற்கிடையே மாணவி கர்ப்பமாகியுள்ளார். இதனால் மாணவியின் பெற்றோருக்கு தெரியாமல் இருக்கவேண்டும் என்பதற்காக வாலிபர் திருப்பூரில் இருந்து கோபிக்கு குடிவந்துள்ளார். இந்நிலையில் நேற்று முன்தினம் மாணவிக்கு பிரசவ வலி ஏற்பட்டுள்ளது. இதனால் வாலிபர் யூடியூப் பார்த்து வீட்டிலேயே பிரசவம் பார்த்துள்ளார். இதில் பெண் குழந்தை பிறந்தது.

ஆனால் அதன்பின்னர் மாணவிக்கு ரத்தப்போக்கு நிற்கவில்லை. ஒருநாள் முழுவதும் வீட்டிலேயே வைத்து பார்த்த வாலிபருக்கு அச்சம் ஏற்பட்டுள்ளது. அதனால் மாணவியை சிகிச்சைக்காக கோபியில் உள்ள தனியார் மருத்துவமனையில் சேர்த்துள்ளார். அங்கு டாக்டர்களுக்கு சந்தேகம் ஏற்படவே விஷயம் வெளியில்வந்துவிட்டது.

இதையடுத்து மருத்துவத் துறை அதிகாரிகள் வாலிபர் தங்கியிருந்த வீட்டுக்கு சென்றனர். அங்கு வாலிபரின் தாய் குழந்தையை கண்காணித்து வந்தது தெரிந்தது. மேலும் வாலிபர் யூடியூப் பார்த்து பிரசவம் பார்த்த அறையில் இருந்து தொப்புள் கொடியை கைப்பற்றினர். தொடர்ந்து வாலிபரிடம் மருத்துவத்துறை அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகிறார்கள். இந்த சம்பவம் கோபியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

## சங்கரன்கோவிலில் சித்திரை திருவிழா: பச்சை சாத்தி பக்தர்களுக்கு காட்சியளித்த நடராஜர்

சென்னை, மே.9

சித்திரைத் திருவிழாவின் முக்கிய நிகழ்ச்சியான தேரோட்டம் நாளை நடைபெறுகிறது.

தமிழகத்தில் பிரசித்தி பெற்ற சங்கரன்கோவில் சங்கர நாராயணர் சுவாமி கோவிலில் ஒவ்வொரு ஆண்டும் சித்திரை மாதம் சித்திரை பிரம்மோற்சவ திருவிழா விமரிசையாக நடைபெறுவது வழக்கம். அவ்வகையில் இந்த ஆண்டின் சித்திரை திருவிழா கடந்த 1ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. விழா நாட்களில் சுவாமி, அம்பாள் பல்வேறு வாகனங்களில் வீதிஉலா வந்து



பக்தர்களுக்கு அருள்பாலித்த னர். சுவாமி, அம்பாள், நடராஜர், முதல் மூவர்கள் சிவப்பு சாத்தி அலங்காரத்திலும், நடு இரவில் நடராஜர் வெள்ளை சாத்தி அலங்காரத்திலும் காட்சி அளித்தனர். இன்று காலையில் நடராஜர் பச்சை சாத்தி அலங்காரத்தில் பக்தர்களுக்கு காட்சி கொடுக்கும் வைபவம் நடந்தது. தொடர்ந்து ரத வீதிகளில் வீதி உலா வந்து பக்தர்களுக்கு காட்சி அளித்தார். இந்நிகழ்வுகளில் திரளான பக்தர்கள் கலந்துகொண்டு தரிசனம் செய்தனர்.

விழாவின் முக்கிய நிகழ்ச்சியான தேரோட்டம் நாளை வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு மேல் நடக்கிறது. இதில் மூன்று தேர்கள் இழுக்கப்படும். விநாயகர், சுவாமி, அம்பாள் தனித்தனியாக திருத்தேர்களில் எழுந்தருளி ரத வீதிகளில் வலம் வந்து பக்தர்களுக்கு அருள் பாலிப்பார்கள்.

## பாமக மாநாட்டிற்கு எதிர்ப்பு தெரிவித்து மனு: சென்னை ஐகோர்ட்டு தள்ளுபடி



சென்னை, மே.9

செங்கல்பட்டு மாவட்டம் மாமல்லபுரத்தில் வருகிற 11ந்தேதி பாட்டாளி மக்கள் கட்சி மற்றும் வன்னியர் சங்கம் இணைந்து சித்திரை முழு நிலவு இளைஞர் பெருவிழா நடத்த உள்ளது. இந்த நிகழ்ச்சி நடத்த தடை விதிக்கக்கோரி வடநெமிலி பஞ்சாயத்து தலைவர் பொன்னுரங்கம் என்பவர் சென்னை ஐகோர்ட்டில் மனு தாக்கல் செய்துள்ளார்.

அதில், "2013ம் ஆண்டு பா.ம.க. மற்றும் வன்னியர் சங்கம் நடத்திய சித்திரை முழு நிலவு திருவிழாவில் பங்கேற்க சென்றவர்களால் விழுப்புரம் மாவட்டம் மரக்காணத்தில் சாதி கலவரம் ஏற்பட்டது. இதில் ஒரு தரப்பு மக்கள் தாக்கப்பட்டு, அவர்களின் வீடுகள் எரிக்கப்பட்டன. இந்த கலவரத்தில் 4 பேர் பலியாகினர். இந்த நிகழ்வுக்கு பின், சித்திரை முழு நிலவு கூட்டத்தில் அரசு அனுமதி அளிப்பதில்லை.

இந்நிலையில், இந்த ஆண்டு சித்திரை முழு நிலவு கூட்டம் நடத்துவது, எங்கள் பகுதியில் உள்ள மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும். இதனால் இந்த நிகழ்ச்சிக்கு தடை விதிக்க வேண்டும்'' என்று கூறியிருந்தார். இந்த வழக்கு ஐகோர்ட்டு நீதிபதி எல். விக்டோரியா கவுரி முன்பு இன்று (வியாழக்கிழமை) விசாரணைக்கு வந்தது. அப்போது நிகழ்ச்சிக்கு ஏற்கனவே அனுமதி தரப்பட்டுள்ளதால் அனுமதி வழங்கக்கூடாது என்று உத்தரவிட முடியாது எனக்கூறிய நீதிபதி மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டார்.

## நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை உயர்வு

நாமக்கல், மே.9

நாமக்கல் மண்டலத்தில் 1,100க்கும் மேற்பட்ட கோழிப்பண்ணைகள் உள்ளன. இங்கு 7 கோடிக்கும் மேற்பட்ட முட்டைக்கோழிகள் வளர்க்கப்படுகின்றன. அவற்றின் மூலம் தினசரி சுமார் 6 கோடி முட்டைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

அவ்வாறு உற்பத்தி செய்யப்படும் முட்டைகள், தமிழக அரசின் சத்துணவு திட்டத்திற்கும், வெளிநாட்டிற்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. மேலும் கேரளா, கர்நாடகா உள்ளிட்ட வெளி மாநிலங்களுக்கும், தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களுக்கும் விற்பனைக்காக அனுப்பி



வைக்கப்படுகிறது. நாமக்கல் மண்டலத்தில் முட்டை கொள்முதல் விலை 505 காசுகளாக இருந்து வந்தது. நேற்று நாமக்கல்லில் நடந்த தேசிய முட்டை ஒருங்கிணைப்புகுழு கூட்டத்தில் அதன் விலையை 5 காசுகள் உயர்த்த முடிவு செய்தனர். எனவே முட்டை கொள்முதல் விலை 510 காசுகளாக அதிகரித்து உள்ளது.

## லேடி கெட்டப்பில் கலக்கும் யோகி பாபு.. வைரலாகும் புகைப்படம்



நடிகர் யோகி பாபு தற்போது தமிழ் சினிமாவில் காமெடி நடிகராக மட்டுமல்லாமல் ஹீரோவாகவும்பலபடங்களில்நடித்துவருகிறார். நெல்சன் இயக்கிய 'கோலமாவு கோகிலா' படத்தில் யோகி பாபுவின் நடிப்பு பட்டிதொட்டி எங்கும் பரவியது. இவர் தற்போது ரஜினியின் 'ஜெயிலர் 2' படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்து வருகிறார். இதற்கிடையில், விநீஷ் மில்லினியம் இயக்கத்தில் 'ஜோராகையதட்டுங்க' என்ற படத்தில் நடித்து முடித்துள்ளார். இப்படம் வருகிற 16ந் தேதி வெளியாக உள்ளது.

அதனை தொடர்ந்து விஜய் சேதுபதியின் 'ஏஸ்' படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். இப்படம் வருகிற 23ந் தேதி வெளியாக உள்ளது. அதாவது இந்த படத்தில் யோகி பாபு லேடி கெட்டப்பில் நடித்துள்ளார். அந்த புகைப்படங்கள் இணையத்தில் வைரலாகி வருகின்றன.

## சூர்யா 45 படத்தின் டைட்டில் ரிலீஸ் அப்டேட்



தென்னிந்திய திரையுலகில் முன்னணி நடிகராக இருப்பவர் சூர்யா. தற்போது ஆர்.ஜே. பாலாஜி இயக்கத்தில் தனது 45வது படத்தில் நடித்து வருகிறார். இந்த படத்திற்கு தற்காலிகமாக 'சூர்யா 45' என்று பெயரிடப்பட்டுள்ளது. டிரீம் வாரியர் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரிக்கும் இப்படத்திற்கு சாய் அபயங்கர் இசையமைக்கிறார்.

இந்த படத்தில் சூர்யாவுடன் முக்கிய கதாபாத்திரத்தில் திரிஷா நடிக்கிறார். மேலும், சுவாசிகா, இந்திரன்ஸ், யோகி பாபு, ஷிவாதா, சுப்ரீத் ரெட்டி, அனகா மாயா ரவி மற்றும் நட்டி நட்ராஜ் ஆகியோர் நடித்து வருகின்றனர். இதில் சூர்யா வக்கீல் கதாபாத்திரத்தில் நடித்திருப்பதாக கூறப்படுகிறது. நீதிமன்ற வழக்கை மையமாக வைத்து படத்தின் கதை உருவாகப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்தநிலையில் இந்த படத்தின் டைட்டில் ரிலீஸ் குறித்த அப்டேட் கிடைத்துள்ளது. அதன்படி, வருகிற ஜூலை மாதம் 23ம் தேதி நடிகர் சூர்யாவின் பிறந்தநாளை முன்னிட்டு வெளியாகும் என்று கூறப்படுகிறது. இதற்கிடையில் இந்த படத்திற்கு 'பேட்டைக்காரன்' என்ற தலைப்பு வைக்கப்பட்டுள்ளதாக தகவல் கிடைத்துள்ளது.

## 'டூரிஸ்ட் பேமிலி' திரைப்படம்: தமிழ் நாட்டில் மட்டும் இத்தனை கோடி வசூலா?




'அயோத்தி, கருடன், நந்தன்' உள்ளிட்ட வெற்றிப்படங்களை அடுத்து சசிகுமார் தற்போது நடித்துள்ள படம் 'டூரிஸ்ட் பேமலி'. குட் நைட், லவ்வர் படங்களை தயாரித்த மில்லியன் டாலர் ஸ்டுடியோஸ் இப்படத்தை தயாரித்துள்ளது. அபிஷன் ஜீவிந்த் இயக்கும் இந்தப் படத்தில் சிம்ரன் கதாநாயகியாக நடித்துள்ளார். யோகி பாபு, எம்.எஸ்.பாஸ்கர், மிதுன் ஜெய்சங்கர், கமலேஷ் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

கடந்த மே 1ந் தேதி வெளியான இப்படம் மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்று வருகிறது. இலங்கை தமிழர்களான சசிகுமார்குடும்பம்அங்குள்ளபொருளாதார சூழல் காரணமாக தமிழகத்துக்குள் சட்டவிரோதமாக நுழைகின்றனர். அதன்பிறகு அவர்களின் வாழ்க்கையில் நடக்கும் சம்பவங்களை நகைச்சுவையுடனும், எமோஷ்னலுடனும் படம் பதிவு செய்துள்ளது.

இந்த நிலையில், இப்படம் தமிழ் நாட்டில் செய்துள்ள வசூல் குறித்த விவரம் வெளியாகி உள்ளது. அதன்படி, இப்படம் தமிழ் நாட்டில் மட்டும் ரூ.20 கோடி வசூல் செய்துள்ளதாக கூறப்படுகிறது.

## ஐபிஎல்: பெங்களூரு அணியின் முக்கிய வீரர் விலகல்



ஐ.பி.எல். கிரிக்கெட்டில் பெங்களூரு ராயல் சேலஞ்சர்ஸ் அணிக்காக விளையாடி வந்த தேவ்தத் படிக்கல் தசைப்பிடிப்பு காரணமாக எஞ்சிய போட்டித் தொடரில் இருந்து விலகி இருக்கிறார்

அவருக்கு பதிலாக 34 வயது மயங்க் அகர்வாலை ரூ.1 கோடிக்கு பெங்களூரு நிர்வாகம் ஒப்பந்தம் செய்துள்ளது. மயங்க் அகர்வால் 12 ஆண்டுக்கு பிறகு பெங்களூரு அணிக்கு திரும்புகிறார்.பெங்களூரு அணி 11 ஆட்டங்களில் விளையாடி 8 வெற்றி பெற்று புள்ளி பட்டியலில் 2வது இடத்தில் உள்ளது.

## பெண்கள் முத்தரப்பு கிரிக்கெட்: இறுதிப்போட்டிக்கு முன்னேறிய இந்தியா



இந்தியா, இலங்கை, தென்ஆப்பிரிக்கா ஆகிய பெண்கள் அணிகள் பங்கேற்றுள்ள ஒரு நாள் கிரிக்கெட் தொடர் இலங்கை தலைநகர் கொழும்பில் நடந்து வருகிறது. இதில் நேற்று நடந்த 5வது லீக்கில் இந்திய அணி, தென்ஆப்பிரிக்காவுடன் மீண்டும் மோதியது. உடல்நலக்குறைவால் தென்ஆப்பிரிக்க கேப்டன் லாரா வோல்வார்ட் விலகினார். இதையடுத்து அந்த அணியை வழிநடத்திய பொறுப்பு கேப்டன் குளோ டிரையான் டாஸ் ஜெயித்து முதலில் இந்தியாவை பேட் செய்ய அழைத்தார். இதன்படி பேட்டிங்கை தொடங்கிய இந்தியா 50 ஓவர் முடிவில் இந்தியா 9 விக்கெட்டுக்கு 337 ரன்கள் குவித்தது. அபாரமாக ஆடிய ஜெமிமா ரோட்ரிக்ஸ் தனது 2வது சதத்தை பூர்த்தி செய்தார். அவர் 123 ரன்களில் (101 பந்து, 15 பவுண்டரி, ஒரு சிக்சர்) ரன்கள் எடுத்தார் .

அடுத்து இமாலய இலக்கை நோக்கி ஆடிய தென்ஆப்பிரிக்காவுக்கு சீரான இடைவெளியில் விக்கெட் விழுந்தது. 50 ஓவர் முடிவில் தென்ஆப்பிரிக்க அணியால் 7 விக்கெட்டுக்கு 314 ரன்களே எடுக்க முடிந்தது. இதனால் இந்தியா 23 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றியை வசப்படுத்தியது.

3வது வெற்றியை பெற்ற இந்திய அணி இறுதிப்போட்டிக்கு முன்னேறியது. தொடர்ந்து 3 ஆட்டங்களிலும் தோல்வியை தழுவிய தென்ஆப்பிரிக்கா வெளியேறியது. வருகிற 11ந்தேதி நடக்கும் இறுதி ஆட்டத்தில் இந்திய அணி இலங்கையை சந்திக்கிறது.

## ரோகித் சர்மாவுக்கு சச்சின் தெண்டுல்கர் வாழ்த்து



டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் இருந்து இந்திய அணியின் மூத்த வீரர் ரோகித் சர்மா அறிவித்துள்ளார். ஏற்கனவே சர்வேதேச டி20 போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்றுள்ள ரோகித் சர்மா ஒருநாள் போட்டிகளில் மட்டும் விளையாட உள்ளதாக அறிவித்துள்ளார்.

இந்த நிலையில், ரோகித் சர்மாவுக்கு இந்திய ஜாம்பவான் சச்சின் தெண்டுல்கர் வாழ்த்து தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது,

2013 ஆம் ஆண்டு ஈடன் கார்டனில் டெஸ்ட் தொப்பியை உங்களுக்கு வழங்கியதும், பின்னர்மறுநாள்வான்கடே மைதானத்தின்பால்கனியில்உங்களுடன் நின்றதும் எனக்கு நினைவிருக்கிறது உங்கள் பயணம் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

அன்றிலிருந்து இன்றுவரை, நீங்கள் ஒரு வீரராகவும், ஒரு கேப்டனாகவும் இந்திய கிரிக்கெட்டுக்குஉங்கள்சிறந்ததைவழங்கியுள்ளீர்கள்.உங்கள்டெஸ்ட்வாழ்க்கைக்கு வாழ்த்துக்கள் ரோகித் சர்மா, மேலும் வரவிருக்கும் விஷயங்களுக்கு வாழ்த்துக்கள். என தெரிவித்துள்ளார் .

## பாகிஸ்தான் சூப்பர் லீக் கிரிக்கெட் போட்டிகளை இடமாற்றம் செய்து உத்தரவு

காஷ்மீரின் அனந்த்நாக் மாவட்டம் பஹல்காம் பகுதியில் கடந்த ஏப்ரல் 22ந்தேதி பயங்கரவாதிகள் நடத்திய கொடூர தாக்குதலில் 26 பேர் கொல்லப்பட்டனர். இந்த தாக்குதலுக்கு பதிலடியாக பாகிஸ்தானில் உள்ள பயங்கரவாத முகாம்கள் மீது இந்தியா அதிரடி தாக்குதல் நடத்தியுள்ளது. பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் உள்ள பயங்கரவாத முகாம்கள் மீது இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.இந்த தாக்குதலுக்கு 'ஆபரேஷன் சிந்தூர்' என பெயரிடப்பட்டுள்ளது. இந்த தாக்குதல் நடவடிக்கையின்போது எல்லையில் பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் செயல்பட்டு வந்த 9 பயங்கரவாத முகாம்கள் மீது துல்லிய தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதற்கு பதிலடி கொடுப்போம் என பாகிஸ்தான் தெரிவித்துள்ளது. இதனை தொடர்ந்து இரு நாட்டு எல்லையிலும் பதற்றம் நிலவி வருகிறது .

இந்த நிலையில். பாகிஸ்தானில் நடைபெற்று வரும் பாகிஸ்தான்சூப்பர்லீக்கிரிக்கெட் போட்டிகளைஇடமாற்றம் செய்து உத்தரவிடப்பட்டுள்ளது

பாகிஸ்தான்சூப்பர்லீக்கிரிக்கெட் தொடரைலாகூர்மற்றும் ராவல்பிண்டியில் இருந்து கராச்சி நகருக்கு மாற்றுவதாக பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியம் அறிவித்துள்ளது.

ராவல்பிண்டி வந்துள்ள கிரிக்கெட் வீரர்கள் உடனே நகரை விட்டு வெளியேற உத்தரவிடப்பட்டுள்ளது .

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.